★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

The "Nam Nadu" A Tamil Daily. ✯ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: ஐப்பசி 17௳ வெள்ளி (2—11—56) ★ ★ வெளியீடு: ஐப்பசி 18௳ சனி (3—11—56) [இதழ் 124

இராணுவ உறவும் முறிகிறது!

நியூயார்க், நவ. 1—

வார்சா ஒப்பந்தத்திலிருந்து, தான் விலகிக் கொள்வதாகவும், நான்கு பெரும் வல்லரசுகளும் தனது நடுநிலையை உறுதி செய்ய வேண்டுமெனவும் ஹங்கேரி ஐ. நா.-விற்குத் தகவல் அனுப்பியிருப்பதாகத் தெரியவருகிறது.

ஹங்கேரியிலிருந்து ரஷ்ய இராணுவத்தைத் திரும்பப் பெற்றுக் கொள்வதுபற்றி உடனடியாகப் பேச்சு வார்த்தைகள் துவங்க வேண்டுமென ஹங்கேரிப் பிரதமர் எம். நாகி ரஷ்யக் குடியரசுத் தலைவர் வரோஷிலோவுக்குத் தந்தி ஒன்று அனுப்பியதாக ஹங்கேரி செய்தி நிறுவனம் தெரிவித்திருக்கிறதாம்.

'இறுதிவரை உறுதியோடு போரிடுவோம்'

'சரணடையமாட்டோம்'

'சுதந்திரத்தைக் காப்பாற்ற-பெருமையைப் பாதுகாக்க-எகிப்தியரே! கிளர்ந்தெழுவீர்!'

எகிப்தியத் தலைவர் நாசர் அறைகூவல்

கெய்ரோ, நவ. 1—

"நமது சுதந்திரத்தை—நமது கௌரவத்தை—நமது பெருமையைக் காப்பதற்காக, நாட்டு மக்களே! நீங்கள் அனைவரும்—ஒவ்வொருவரும் ஒரு இராணுவ வீரர்தாம்! எனவே, கிராமந்தோறும்—இடம் தோறும் போராடுவோம்! நம்மில் கடைசி நபர் உள்ளவரை போராடுவோமே தவிர, சரணடைய மாட்டோம்.

"சகோதரர்களே! இன்று நாம், நமது வரலாற்றில் புதியதோர் கட்டத்தைத் துவங்குகிறோம்,"

என்று, எகிப்தியக் குடியரசுத் தலைவர் நாசர் வானொலி மூலம் எகிப்திய மக்களிடை பேசும்போது குறிப்பிட்டிருக்கிறார்.

கூட்டுச் சதி!

"எந்தவிதக் காரணமும் இன்றி இஸ்ரேல் நம்மைத் தாக்க முற்பட்டது, பிரிட்டிஷ்—பிரெஞ்சு—இஸ்ரேல் நாடுகள் ஒன்றுகச் சேர்ந்து செய்த சதியின் துவக்கம்தான்.

"இந்தக் கூட்டுச் சதியின் நோக்கம், முதலில் எகிப்திய விமானப் படையையும், பின்னர் சினய் பாலைவனத்தில் உள்ள எகிப்திய தரைப் படையையும் படிப்படியாக அழித்துவிட்டு எகிப்தை ஆக்கிரமித்து அடிமை கொள்வதுதான்"

என்றும் கர்னல் நாசர் விளக்கியிருக்கிறார்.

"ஆங்கிலோ — பிரெஞ்சுவாதிகள் தந்த 'இறுதி எச்சரிக்கை' (அக். 30) நம்மால் ஏற்க முடியாதது; நமது சுதந்திரத்திற்கும் உரிமைக்கும் பங்கம் விளைவிப்பது—என்று நாம், ஐ. நா. பாதுகாப்புச் சபையில் முறையிட்டோம்; பாதுகாப்புச் சபையும் கூடிற்று; ஆனால், பிரிட்டனும் பிரான்சும் எல்லா சர்வதேசச் சட்டங்களையும், ஐ. நா. சாசனத்தையும் உலக மக்களின் கருத்தையும் அலட்சியப்படுத்திவிட்டுச் சண்டையை நிறுத்த மறுத்துவிட்டன.

"நமது இராணுவம் தனது கடமையைச் செய்துகொண்டிருக்கிறது,"

என்றும் நாசர் முழக்கமிட்டிருக்கிறார்.

'எகிப்துமீது தாக்குதல் தவறானது' என்கிறார் ஐசனோவர்

அமெரிக்கா தலையிடாது எனவும் அறிவிப்பு

எகிப்துமீது பிரிட்டிஷ் — பிரெஞ்சு ஆயுதத் தாக்குதல் தவறான முறையில் தொடங்கியிருப்பதாக அமெரிக்கத் தலைவர் ஐசனோவர் கூறியிருக்கிறார்.

சர்வ தேசத் தகராறுகளைத் தீர்த்துக்கொள்ள பலாத்காரத்தை உபயோகிப்பதை, புத்திசாலித்தனமான நேரிய வழியென்று அமெரிக்கா கருதவில்லை என்றும் அவர் கூறினாராம்.

இந்த மத்தியக் கிழக்குப் பகைகளில் அமெரிக்கா தலையிடாது என்றும் அவர் கூறியிருக்கிறார்.

இந்த விவகாரம் ஐ. நா. பொதுச் சபைக்கு வரும்போது, அங்கு ரத்து அதிகாரம் கிடையாது என்பதால், இந்தத் தகராறு பற்றிய உலகக் கருத்தை ஒன்று திரட்டி, பிரச்சினைக்கு நியாயமானதோர் முடிவு காண முடியும் என்று நம்புவதாகவும் அவர் கூறியிருக்கிறார்.

பிரிட்டன் - பிரான்ஸ் வாபஸாக வேண்டும்!

'உலகம் மீண்டும் ஓர் யுத்தத்தில் மூழ்கி விடாமல் காப்பாற்றுக! எகிப்திய எல்லைக்குள்ளிருக்கும் பிரிட்டிஷ்-பிரெஞ்சு நாடுகள் உட்பட, எல்லா வெளிநாட்டுத் துருப்புகளையும் உடனடியாக வெளியேற்றுக!"

என்று, ஐ. நா. சபைக்கு, பண்டித நேரு கடிதம் ஒன்று எழுதியிருப்பதாகத் தெரிய வருகிறது.

குழப்பம் ஏற்படுமாம்!

சில சாலைகளின் பெயர்களை மாற்றியமைக்க முடியாதாம்

நகரசபை கோரிக்கைக்கு சென்னை சர்க்கார் மறுப்பு

சென்னை, அக். 31—

சென்னை நகரில் சில சாலைகளின் பெயர்களை மாற்றியமைக்க வேண்டும் என்று சென்னை நகராட்சி மன்றம் விடுத்த கோரிக்கையை சென்னை அரசாங்கம் நிராகரித்துவிட்டது. இப்படி மாற்றம் செய்வதால் குழப்பம் ஏற்படும் என்று காரணம் கூறப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

பிரி. மக்கள் சபையில் கொந்தளிப்பு

தொழிற் கட்சியினரின் சரமாரியான கேள்விகள்

பதிலளிக்க முடியாமல் ஈடன் திணறல்

சபை ஒத்திவைக்கப்பட்டது

வேறெப்போதும் இல்லாதவகையில் பிரிட்டிஷ் மக்கள் சபையில் பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கிறது.

தொழிற்கட்சியினரின் சரமாரியான கேள்விகளுக்கு நேரடியான பதிலளிக்க இயலாமல் பிரதமர் ஈடன் திணறியிருக்கிறார்.

'இல்லை, இல்லை; பதில் வேண்டும்,' என்ற குரல், சபைத் தலைவரின் 'அமைதி, அமைதி,' என்ற குரலை அமிழ்த்திவிட்டு சபையில் எதிரொலித்திருக்கிறது.

"எகிப்து மீது யுத்தம் பிரகடனம் செய்யப்பட்டிருக்கிறதா? இல்லையானால், அங்கு சண்டைக்கு அனுப்பப்பட்டுள்ள நமது படைவீரர்களுக்கு என்ன பாதுகாப்பு?"

என்று, பெவான் கேள்வி எழுப்பியிருக்கிறார்.

"நாங்கள் ஏற்கனவே அறிவித்தபடிதான் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறோம்; அதைத் தவிர, வேறு எதுவும் நாங்கள் கூறுவதற்கில்லை" என்று ஈடன் அக்கேள்விக்குப் பதிலளித்தாராம்.

உடனே பெவான் எழுந்து, "இது, எனது கேள்விக்குச் சரியான பதில் அல்ல" என்று கூறி, "சர்க்கார் மேற்கொள்ளும் நடவடிக்கை, பிரிட்டிஷ் மக்களின் விருப்பங்களுக்கு உகந்ததாக இருக்க வேண்டும்; இப்போது நமது படைவீரர்கள் எதிரியின் கையில் சிக்கிவிட்டால் என்ன பாதுகாப்புக் கிடைக்கும்?" என்று கேட்டிருக்கிறார்.

சபைத் தலைவர், 'இதனை விஷய விவாதத்தின்போது பேசக் கூடாதா?' என்று கேட்டபோது, 'இல்லை; பதில் வேண்டும்,' என்ற குரல் ஓங்கி நின்றிருக்கிறது.

சபைத் தலைவர், "என் குரலுக்கு இங்கு மதிப்பில்லையானால், நான் கூட்டத்தை ஒத்திவைக்கிறேன்" என்று கூறி, அரைமணி நேரம் சபையை ஒத்திவைத்திருக்கிறார்.

ராஜீயத் தொடர்புகள் அறுபட்டன!

பிரிட்டன், பிரான்ஸ் நாடுகளுடன் கொண்டிருந்த ராஜீயத் தொடர்புகளை எகிப்து அறுத்துக்கொண்டு விட்டதாகத் தெரிய வருகிறது

எகிப்து மீது குண்டுவீச்சு!

இந்தியா ஆட்சேபம்!

எகிப்திய எல்லைக்குள் பிரிட்டன் குண்டு வீச்சு நடத்தியிருப்பதை இந்திய சர்க்கார் ஆட்சேபித்து, குறிப்பு ஒன்று தந்திருக்கின்றனர் என்று தெரியவருகிறது.

பண்டித நேரு எகிப்திய தலைவர் நாசருக்கு அனுப்பியுள்ள செய்தி ஒன்றில், எகிப்தின் நிலைக்குத் தனது அனுதாபத்தைத் தெரிவித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

இதுவன்றி, அமெரிக்கத் தலைவர்களான ஐசனோவர், டல்லஸ் ஆகியோருக்கும், பிரிட்டிஷ் பிரதமர் ஈடனுக்கும், நாசருக்கும் நேரு பண்டிதர் கடிதம் எழுதியிருப்பதாகத் தெரியவருகிறது.

பிரிட்டிஷ்-பிரெஞ்சு படைகள் அக்கிரமம்

எகிப்தியக் கப்பலை மூழ்கடித்தன

நகரங்கள் மீதும் குண்டுமாரி பொழிந்தன

சூயசில் போக்குவரத்து நின்றது

எகிப்திய யுத்தக் கப்பல் ஒன்றை சூயஸ் கால்வாய் பிரதேசத்தில், பிரிட்டிஷ் - பிரெஞ்சு விமானங்கள் குண்டுமாரி பொழிந்து மூழ்கடித்ததின் விளைவாக, சூயஸ் கால்வாயில் போக்குவரத்து முழுவதும் நிறுத்தப்பட்டு விட்டது என்று எகிப்து இராணுவத் தலைமைக் காரியாலயம் அறிவித்துள்ளது.

பிரிட்டன் - பிரான்சு ஆகிய நாடுகளுடன், எகிப்து 'யுத்த நிலை'யில் இருப்பதாகவே எகிப்து கருதுகிறது என்றும் ஐ. நா. - வில் உள்ள எகிப்திய அதிகாரி ஒருவர் அறிவித்துள்ளார்.

சினய் பாலைவனத்தில் இஸ்ரேல் படைகளுடன் சேர்ந்து கொண்டு எகிப்துக்கு எதிராகப் பிரிட்டிஷ்—பிரெஞ்சுப் படைகள் போரிட்டு வருகின்றன என்றும் ஐ. நா. - வில் உள்ள எகிப்து தூதுக் குழு கூறியிருக்கிறது.

அலெக்சாண்டிரியா மீதும், கெய்ரோ மீதும் குண்டுமாரி பொழிந்த ஆறு பிரிட்டிஷ் விமானங்களை எகிப்து சுட்டுவீழ்த்தியுள்ளதாகவும் செய்தி தரப்பட்டிருக்கிறது.

சினய் பாலைவனத்தில் உள்ள எகிப்தின் இராணுவத் தளமான 'ராபா' பிடிபட்டுவிட்டதாக இஸ்ரேல் தரப்பில், டெல் அவிவிலிருந்து செய்தி தரப்படுகிறது.

இப்படியாக, எகிப்து மீது பிரிட்டன்—பிரான்ஸ்—இஸ்ரேல் நாடுகள் துவக்கியுள்ள யுத்தம் கடுமையாக நீடித்துக்கொண்டிருக்கிறது என்று தெரியவருகிறது.

ஆசிய-ஆப்பிரிக்க நாடுகளே! ஆர்த்தெழுவீர்!

'பாண்டுங் நாடுகள் மாநாடு கூட்டும்'

சோவியத் ரஷ்யா அறைகூவல்

"எகிப்திலிருந்து பிரிட்டிஷ்—பிரெஞ்சு—இஸ்ரேல் துருப்புகளைத் திரும்பப்பெறக் கோரி, இரண்டாவது முறையாக பாண்டுங் நாடுகள் மாநாடு கூடவேண்டும்,"

என்று, ரஷ்யா அறிவித்துள்ளது. மேலும், அமெரிக்கத் தலைவர் ஐசனோவருக்கு, ரஷ்யாவிலிருந்து கடிதம் ஒன்றும் இது குறித்து அனுப்பப்பட்டுள்ளதாம்.

உடனடியாக மாநாடு நடைபெற வேண்டுமென இந்தோனேஷியா, இந்தியா ஆகிய நாடுகளின் தலைவர்களுக்கும் ரஷ்யா கடிதம் எழுதியுள்ளதாம்.

நம் நாடு

சென்னை 2-11-'56 வெள்ளி

ஒத்தூதும் பத்திரிகைகள்!

பார்லிமெண்டரி சனநாயக முறை வெற்றிகரமாகச் செயல்படுவதற்கு, ஆட்சிப் பொறுப்பைக் கைப்பற்றக்கூடிய பலம் பொருந்திய மாற்றுக் கட்சி, கட்டாயத் தேவையாகிறது என்ற தத்துவ உண்மையை, அதுபற்றிய அறிவு படைத்திருக்கும் அனைவரும் கூறிவருகின்றனர். ஆளும் காங்கிரசுக் கட்சிகூட, செயல்பட்டு வரும் எதிர்க்கட்சிகள் அனைத்தையும் கரைபடுத்தும் வகையில், சிறந்த மாற்றுக் கட்சி தேவைப்படுகிறது என, வாய் இனிக்கப் பேசி வருகிறது.

சிறந்த மாற்றுக்கட்சி தேவை என்ற கருத்து நாட்டுமக்களிடை விதைக்கப்பட்டு வருவதுகண்டுதான், காங்கிரசுக் கட்சியும், மாற்றுக் கட்சி இருந்து தீரவேண்டிய இன்றியமையாமை குறித்து, வேண்டாவெறுப்பாகப் பேசித் தீரவேண்டிய கட்டாயத்திற்கு வந்திருக்கிறது என்பது மறுக்க முடியாத உண்மையாகும். காங்கிரசுக் கட்சியின் செயல்முறை, மேற்குறித்துள்ள முடிவிற்குத்தான் நம்மைக் கொண்டுவந்து நிறுத்துவதாக அமைந்திருக்கிறது.

ஆளும் கட்சிக்கு எதிராக அமைக்கப்படும் மாற்றுக் கட்சி, வெறும் பெயரளவில் மாற்றுக் கட்சியாக இருத்தல் மட்டும் போதாது—'பலம் பொருந்தியதாக இருக்கவேண்டும்' என்று, கட்சியின் அளவை முன்னிலைப்படுத்தி அழுத்திச் சொல்லப்படுகிறது. ஒரு மாற்றுக் கட்சி பலம் பொருந்தியதாக வளர்ச்சி பெறுவதும், பலமற்றதாகத் தேய்ந்து போவதும், பெரும்பான்மை மக்கள் காட்டும் ஆதரவையும் ஆதரவின்மையையும் பொறுத்திருக்கிறது. எனவே, உருவாக்கப்படும் மாற்றுக் கட்சிக்கு மக்களின் ஆதரவு பல்கிப்பெருக வேண்டுமானல், அவர்களுடையத் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய இலட்சியங்களை உள்ளடக்கிக் கொண்டிருப்பதாக அம்மாற்றுக்கட்சி இருந்தாகவேண்டும். அப்பொழுதுதான், அந்த மாற்றுக் கட்சிக்கு, மக்களின் ஆதரவு பெருகி வருவது எதிர்பார்க்கக்கூடும்.

மக்கள் விரும்பி ஏற்கக்கூடிய இலட்சியங்களைக் கொண்டிருந்தாலல்லாது எந்த ஒரு மாற்றுக் கட்சியும், அது எத்தகைய புகழ்வாய்ந்த ஒரு தலைவரையோ அல்லது பல தலைவர்களையோ கொண்டு தோற்றுவிக்கப்பட்டதாக இருந்தாலும், பிரசவ அறையிலேயே மரண முறுவது நிச்சயத்திலும் நிச்சயமாகும். இவ்வாறு நிறைவேற்ற மேற்கொள்ளும் இலட்சியங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதைக் கொண்டு, தலைவர்களின் தரம் எப்படிவேண்டுமானலும் இருக்கலாமென்று கருதுவதாகப் பொருள்கொள்ளக்கூடாது. கொள்ளும் இலட்சியங்களைப் போலவே, தலைவர்களும் எல்லா வகையிலும் தரமானவர்களாகவும் இருந்து தீரவேண்டியது கட்டாயத்திலும் கட்டாயமாகும்.

வளமான மாற்றுக் கட்சி வெற்றிகரமாக வளர்ந்தோங்கி செயல்பட்டு வருவதற்கு சிறந்த இலட்சியங்களும், தரமான தலைவர்களும் இன்றியமையாத் தேவைகளாக இருப்பதுபோன்றே, செய்தி இதழ்களின் ஒத்துழைப்பும் இருந்தாக வேண்டும். அப்பொழுதுதான் மாற்றுக் கட்சியின் வளர்ச்சி விரைவில் கைகூடும். இது பொது விதி.

நமது நாட்டு இதழ்களில் பெரும்பாலானவை, எந்த அளவு, மாற்றுக் கட்சி வளர்ச்சிக்கு உதவக்கூடியனவாக உள்ளன என்பது ஆராயத்தக்கதாகும். இதுபற்றி ஆராயப்புகுவதற்குமுன், பார்லிமெண்டரி சனநாயகப் பாதுகாப்பில், நமது நாட்டு இதழ்களுக்கு உள்ள பற்றுதலின் அளவையும் கண்டறிதல் கட்டாயமாகிறது.

ஏதோ, இந்து மதத் துறையில், வேண்டாவெறுப்பாக இந்தியப் பேரரசு செய்யப்புகும் மாற்றங்கள் கண்டு, காரசாரமாகக் கண்டித்து எழுதும் போக்குடையனவாக நம் நாட்டு இதழ்கள் உள்ளனவே அல்லாது, வேறு நேரங்களில், அவசியமிருந்தாலும் இல்லாமற்போனாலும் காங்கிரசு ஆட்சியினரைத் தாங்கி நின்று, தங்களுக்கு விருப்பமான அமைச்சர்களுக்குத் துதி பாடுவதையே தொழிலாகக் கொண்டுள்ளன. இவ்வாறு நடந்து கொள்வது பெரும்பாலான பத்திரிகைகளின் தொழில் முறையாக இருக்கிறது.

அதுவுமன்றி, பெரும்பான்மையான பத்திரிகை ஆசிரியர்களின் சாதி நினைப்பும், கோத்திர எண்ணமும், சனநாயகக் கண்ணோட்டத்திற்கு அறவே முரண்பட்டதாக இருந்துவருகிறது. அவர்களில் பெரும்பாலோர், பழமையைப் பாதுகாப்பதற்காக, தப்பித்தவறி வேர்விட்டுவரும் சனநாயகப் பயிரை அழித்துவிடும் துணிவுடன் பணியாற்றும் பண்பு கொண்டிருப்பவர்களாவர்.

முள்வேலியாக நின்று சனநாயகப் பயிரை காத்து வளர்த்து வரவேண்டிய இப்பத்திரிகை ஆசிரியர்கள், தங்கள் கடமையை மறந்து பயிரையே மேய்ந்துவரும் காட்டு விலங்குகளாகக் கடனாற்றி வருகின்றனர்.

இவர்கள் நடைமுறையை விளக்க பின்வரும் சிறுகதை ஒன்றே போதுமானதாகும்.

ஒரு அரசன், கத்தரிக்காயைப் பார்த்து ஆச்சரியம் கொண்டவனாய், 'இது என்ன காய்?' என்று அமைச்சரைக் கேட்டான். 'இது, காய்களுக்கெல்லாம் அரசன்; அதனால் தான் இதன் தலையில் முடியும் வைத்திருக்கிறது' என்று, காயின் காம்பு பகுதியைக் காட்டி விளக்கம் தந்தான் அமைச்சன்.

இதைக் கேட்ட அரசன், 'இனிமேல் காய்களின் அரசனான கத்தரிக்காயை அரண்மனையில் தினம் தவறாமல் சமைத்து எனக்கு இட்டுவர வேண்டும்' எனக் கட்டளையிட்டான்.

ஒரு நாள், கத்தரிக்காயில் தலைப் பகுதியில் இருந்த காம்பையும் எடுக்காமல், கத்தரிக்காயை சமைத்திருந்தான், அரண்மனை சமையல்காரன். அந்தக் காம்பில் முளைத்திருந்த முள் ஒன்று அரசன் வாயிலும் சிக்கிவிட்டது. அக்காய்பை மென்றதும், அதிலிருந்த முள் அரசனின் வாயில் தைத்துவிட்டது. கத்தரிக்காய் முள்ளால் குத்துண்ட அரசன் சீற்றங்கொண்டவனாய், 'இப்படி முள் கொண்டு குத்துகிற காயையா 'காய்களின் அரசன்' என்று புகழ்ந்து கூறினாய்?' என அமைச்சனை நோக்கிக் கேட்டான். அதற்கு அமைச்சன், 'நான் சொன்னதுபோல் கத்தரிக்காய், காய்களுக்கெல்லாம் அரசன்தான். ஆனால் துன்மார்க்கன்; அதனால்தான் அவன் தலையில் ஒரு ஆணியும் வைத்து அடித்திருக்கிறது' என்றுகூறி, அரசனின் கோபத்தைத் தணித்தான். அரசனும் அமைச்சரின் பேச்சு கேட்டு மன அமைதி அடைந்தான்.

இந்தக் கதையில் வருகிற அமைச்சர்களைப் போலவே தான், ஆளும் காங்கிரஸ் கட்சிக்குக் கட்டியங்கூறி, அதன் நல்லாசியைப்பெற்று மகிழ்வதில் நாட்டு இதழ்களும் நாட்டமுடையனவாக உள்ளன.

காஷ்மீர் எதிர்காலம் பற்றி வாக்கெடுப்பு நடத்தவேண்டும் என்று இந்தியப் பிரதமர் கூறியபொழுதும், வாக்கெடுப்பு கோரிக்கை அர்த்தமற்றது என்று அவரே பின்னர் சொன்னபொழுதும், இரண்டு துண்டாக்கி காஷ்மீரை இந்தியாவும் பாகிஸ்தானும் பகிர்ந்து கொள்ளுவதே பரிகாரமாகும் என்று அதே இந்தியப் பிரதமர் சாற்ற முன்வந்தபொழுதும், நாட்டுப் பத்திரிகைகள், அவர் கூறிய ஒவ்வொரு கருத்துக்கும் ஒத்து ஊதியே வந்துள்ளன.

ஒத்து ஊதுவதையே தொழிலாகக் கொண்டிருக்கின்ற இந்தப் பததிரிகைகளின் ஒத்துழைப்பு மாற்றுக்கட்சி வளர்ச்சிக்கு உதவுவது எங்கே? பார்லிமெண்டரி சனநாயக முறைதான் காப்பாற்றப்படுவது எது?

இந்த ஒத்து ஊதும் குணாளர்களையும் பொது மக்களமுன் அம்பலப்படுத்தியாக வேண்டும். இவர்களுடைய ஒத்துழைப்பை உதறித் தள்ளிவிட்டு, பொதுமக்களை விழிப்படையச் செய்வதில்தான் மாற்றுக் கட்சி வளர்ச்சியும், மக்களாட்சி பாதுகாப்பும் அமைந்திருக்கிறது. இப்பெரும் பாதையில் தான் நமது கழகம் துணிந்து சென்றுகொண்டு இருக்கிறது.

ரூ. 30 கோடி செலவில்!

கனி எண்ணெய் ஊற்று கண்டுபிடிக்கத் திட்டம்

புதுடில்லி, அக். 31—

இரண்டாவது ஐந்தாண்டுதிட்ட காலத்தில், நாட்டில்கனிஎண்ணெய் ஊற்றுகளை கண்டுபிடிப்பதற்காக, மொத்தம் ரூ. 30 கோடி செலவு மதிப்புள்ள ஒரு திட்டத்தை மத்திய அரசாங்கம் தயாரித்துள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தண்டனை குறைகிறது!

புதிய ஆந்திர மாநில அமைப்பையொட்டி, சிறையிலுள்ள குற்றவாளிகளுக்குத் தண்டனை குறைக்கப்படுகிறது. தண்டிக்கப்பட்ட காலத்தில், ஆண்டுக்கு ஒரு மாதம் குறைக்கப்படும் என்று தெரிகிறது.

'ஏக இந்தியா'க்கள் பார்வைக்கு:

'சென்னை மாநகர் தென்னிந்திய கலாச்சாரத்தின் உறைவிடம்'

'இந்தியாவில் பல்வேறுபட்ட வாழ்க்கைமுறைகளை காண்கிறேன்'

எதியோப்பிய மன்னர் ஹெயிலி செலாசி கருத்து

'தென்னாட்டு கலாச்சாரம் தனித்தன்மையானது' என்கிறார் நகரசபைத் தலைவர்

சென்னை, அக். 31—

"உலகின் பல நாடுகளையும் போலவே எதியோப்பியாவிலும், தென்னிந்திய நாகரீகத்தின் உறைவிடமாக சென்னை மாநகர்தான் கருதப்படுகிறது" என்று, எதியோப்பிய மன்னர் ஹெயிலி செலாசி குறிப்பிட்டிருக்கிறார்.

"சில நாட்கள் தங்கியதற்குள்ளாகவே, இந்தியாவில், மக்களது பலவேறுபட்ட வகையான வாழ்க்கை முறைகளையும் அறிந்து உணர்ந்துகொள்ளும் வாய்ப்பு கிடைத்தது கண்டு மகிழ்கிறேன்"

என்றும் அவர், நகரசபை தனக்குத் தந்த வரவேற்பிற்குப் பதிலளிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

"இந்தியாவின் இந்தப் பகுதியிலிருந்து வந்துள்ள 'இந்தியர்'கள், எதியோப்பியாவில் பல துறைகளிலும் ஈடு இணையற்ற சேவைபுரிந்திருப்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். குறிப்பாக, பள்ளி ஆசிரியர்களாகவும் கல்வி நிபுணர்களாகவும் இருந்து அவர்கள் ஆற்றி வரும் பணிக்கு எங்களின் நன்றியும் பாராட்டுதலும் உரித்தாகும்," என்றும் மன்னர் குறிப்பிட்டிருக்கிறார்.

வரவேற்புரை

"தென்னாட்டில் பார்க்க வேண்டிய இடங்கள் பல உண்டு

"தென்னாடு, தனக்கென ஒரு தனியான வளமிக்க கலாச்சாரப் பாரம்பரியமுடையது. இந்தியக் கலை, சிற்பம் இவற்றின் உருவாக்கத்திற்குப் பெருமளவு உதவியிருக்கிறது. அத்தகைய கலாச்சாரச் சின்னங்களை நீங்கள் இங்கு தங்கியிருந்து பார்க்க வேண்டுமென நான் விழைகிறேன்"

என்பதாக, சென்னை நகரசபைத் தலைவர் இராமநாத(ஐயர்), மன்னரை வரவேற்றுப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

இதற்கு முன்பாக அவர், எதியோப்பியாவையும் இந்தியாவையும் பிணைக்கும் பல அம்சங்கள் உண்டு என்றும, மன்னரின் வருகை, உறவுகளைப் பலப்படுத்த உதவும் என்றும் எடுத்துரைத்திருக்கிறார்.

மன்னருக்கு நகரமக்கள் சார்பாக தங்கத்தாலும், வெள்ளியாலும் ஆன 'அசோக ஸ்தூபி' ஒன்றும் தரப்பட்டது.

'தமிழ்ச் செல்வத்தைப் புறக்கணிக்கஇயலாது'

சர், சி. பி. விளக்குகிறார்

உதகமண்டலம், அக். 29—

இங்குள்ள இந்திப் பிரச்சார சபையின் புதிய கட்டிடத்தை சர். சி. பி. இராமசாமி (ஐயர்) திறந்து வைத்துப் பேசுகையில், வடஇந்தியர் தமிழைக் கற்க வேண்டும் என்று வலியுறுத்திப் பேசினார். தென்இந்தியர் இந்தி அல்லது வங்காள மொழியை கற்கவேண்டும் என்றார்.

மேலும் அவர் சொன்னார்:—

"இந்திய விவகாரங்களில் மொழியின் நிலை குறித்து பெரிதும் தவறான கருத்து நிலவுகிறது; தமிழ் நாட்டைப் பொறுத்தவரையிலானாலும் சரி— அகில இந்திய அடிப்படையிலானாலும் சரி — தமிழின் முக்கியத்துவத்தைக் குறைக்க முடியாது. தமிழர்களைப் பொறுத்த வரையில், மாநில சர்க்கார் அலுவலகங்களில் தமிழைத்தான் உபயோகிக்கவேண்டும்; இதிலிருந்து தப்புவதற்கு வழிகிடையாது.

"தமிழுக்குப் பதில் இந்தியைப் புகுத்த முயற்சிப்பவர்கள் பெரிய தவறு செய்கின்றனர்.

'தேசிய ஒற்றுமைக்கு இந்தி பயன்படும்; ஆனால், தமிழ் புராதான மொழி; உலகத்திலேயே சிறந்த இலக்கியம் உள்ள 2 அல்லது 3 மொழிகளில் தமிழ் ஒன்றாகும். இந்தச் செல்வத்தைப் புறக்கணிக்க முடியாது."

'எதிர்க் கட்சி அமைக்க ஆக்கமளிக்க வேண்டும்'

ஆச்சாரியாருக்கு எச். பி. காமத் வேண்டுகோள்

மதுரை, அக். 28—

"சனநாயகம் வெற்றிகரமாகச் செயல்படுவதற்கு, ஆச்சாரியார் காங்கிரசை விட்டு வெளியேறி, சமபலம் பொருந்திய ஒரு எதிர்க் கட்சியை காங்கிரசுக்கு எதிராக உருவாக்குவதற்கு ஆக்கமளிக்க வேண்டும்,"

என்று, பி. சோ. கட்சி பிரமுகர் காமத், பொதுக்கூட்டமொன்றில் பேசுகையில் வேண்டுகோள் விடுத்தார்.

"பண்டையக் காங்கிரஸ்காரர்களுக்குக்கூட, காங்கிரசுக்கு எதிராக ஒரு நல்ல எதிர்க்கட்சி தேவை என்பதை உணரக்கூடிய அளவிற்கு, இன்றைய அரசாங்கம் நடந்துகொள்ளுகிறது" என்று வெளிப்படையாக அவர் குறிப்பிட்டுப் பேசினார்.

"உண்மையிலேயே, தான் வெளியிட்ட வேண்டுகோள் குறித்து அவருக்கு அக்கறையிருக்குமானல், போஸ், கிருபளானி, ஜெயப்பிரகாஷ் போன்றவர்கள் காங்கிரசைவிட்டு வெளியேறியதைப் போன்று, ஆச்சாரியாரும் வெளியேறி, நல்ல எதிர்க்கட்சியை உருவாக்குவதற்குப் பாடுபடவேண்டும்," என்றும் காமத் குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில், இந்த நாட்டில் காங்கிரஸ் எதிர்க்கட்சி இயங்குவதை விரும்பவில்லை என்றும், இந்த நாட்டில் ஒரே கட்சிதான் ஆட்சி செலுத்தவேண்டும் என்று அது விரும்புவதாகவும் கூறினார்.

பால் பஞ்சம் தீருமா?

சென்னை, அக். 31—

சென்னைக்கு அருகிலுள்ள மாதவரத்தில் ஒரு பால் பண்ணை நிறுவுவதற்கு ரூ 1,12,50,000 செலவிட அரசாங்கம் அனுமதி தந்துள்ளது.

இந்தப் பண்ணையை அமைப்பதற்காக ரூ. 11,30,000 செலவிட்டு இதுவரை 600 ஏக்கர் நிலம் வசப்படுத்தப்பட்டுள்ளது. 1957—58-ம் ஆண்டுக் காலத்தில் இந்த பண்ணை 2,500 பவுண்டு பாலை தினசரி உபயோகத்திற்கு அளிக்கும் என நம்பப்படுகிறது. மேலும், 1,500 பசுமாடுகள் இந்தக் காலனியில் இடம்பெறும் என்றும் தெரிகிறது.

இந்தத் திட்டத்தின் நோக்கம், இரண்டாவது ஐந்தாண்டுக் காலமுடிவில் தினசரி 1,50,000 பவுண்டு பாலை நகர விநியோகத்திற்குத் தருவது என்றும், இதன் மூலம் அரசாங்கத்திற்கு ரூ 4,70,000 இலாபம் கிடைக்குமென்றும் நம்பப்படுகிறது.

ஐ. நா. கல்வி-விஞ்ஞான-கலாச்சார நிறுவனத்தின் பொது மாநாடு

ஒரு திங்கள் டில்லியில் நடைபெறும்

கவனிக்கவிருக்கும் விஷயங்கள் குறித்து விளக்கம்

நவம்பர் 5-ந்தேதி புதுடில்லியில் ஐ. நா. கல்வி—விஞ்ஞான—கலாச்சார நிறுவனத்தின் பொது மாநாடு கூடுகிறது. ஆசியாவில் இது வரை இவ்வளவு பெரிய சர்வதேச மாநாடு கூடியதில்லை. அது ஒரு மாதம் நடைபெறும்.

மாநாட்டுக்கு 77 நாடுகளிலிருந்து எதிர்பார்க்கப்படும் சுமார் 1,000 பேர்கள் இருப்பதற்கு வசதியாக இந்தியா, மாநாடு கூடுவதற்கென்று தனிப்பட்ட ஒரு கட்டிடமும், 250 அறைகளுள்ள ஆறு அடுக்குக் காரியாலயக் கட்டிடமும், ஒரு புதிய ஓட்டலும் கட்டியுள்ளது.

'யுனெஸ்கோ'வின் முயற்சிகளையும் வசதிகளையும் அடுத்த பத்து ஆண்டுகளுக்கு மூன்று முக்கியவழிகளில் செலுத்தும் திட்டம் ஒன்று இந்த ஆண்டு மாநாடு கவனிக்கப் போகும் முக்கிய வேலையாகும். அத்திட்டத்தை நிர்வாகக் குழு ஏற்கனவே ஒப்புக்கொண்டாயிற்று; அது முக்கியமாக வற்புறுத்துவன வருமாறு :—

1. லத்தீன் அமெரிக்காவில் எல்லோருக்கும் கட்டாய ஆரம்பக் கல்வி ;

2. வரண்ட பிரதேச ஆராய்ச்சி, இது, ஐரோப்பாவின் விளிம்பிலிருந்து மத்தியக் கிழக்கு வழியாக நெடுகத் தென் ஆசியா வரைக்குமுள்ள நாடுகளுக்கு நேரடியாகப் பயன் விளைக்கும் ;

3. தென் ஆசியா வளர்ச்சி ; கிழக்கத்திய—மேற்கத்திய கலாச்சார மதிப்புகளுக்கிடையே சராசரியான பாராட்டுதலை வளர்த்தல்.

இவற்றுக்கும் 'யுனெஸ்கோ'வின் மற்ற நடவடிக்கைகளுக்குமாக அடுத்த இரண்டு ஆண்டுக்கு 216-கோடி டாலர் வரவு-செலவுத் திட்டம் மகாநாட்டில் தாக்கலாகும்.

வரண்ட நாடுகள் ஆராய்ச்சி நெடுநாளாக நடப்பதுதான் எனினும், இந்தப் பத்தாண்டுத் திட்டத்தில் புதிதாய் வலியுறுத்தப்படும். அந்த ஆராய்ச்சி பல நாடுகளுக்குப் பயன்படும்; முக்கியமாக 30 நாடுகளுக்கும் சுமார் 20 சுயாட்சியில்லாத பிரதேசங்களுக்கும் பயன்படும்.

கடல் நீராயினும், கிணற்று நீராயினும், உப்பு நீரை நல்ல தண்ணீராக்கும் முறைகளையும், செடிகளுக்கு எவ்வளவு தண்ணீர் வேண்டும் என்பதையும், நிலையாக ஓரிடத்தில் இல்லாமல் திரிந்து வரும் நாடோடி மக்களை பாசன வசதி பெற்ற நிலத்தைப் பயிர் செய்யுமாறு பயிற்றுவிப்பதையும் அந்த ஆராய்ச்சி சிறப்பாகக் கவனிக்கும்.

சேதி கேட்டீரா ?

புதுடில்லி, அக். 30—

1957—58-ம் ஆண்டிற்கு ரூ. 35 33,68,750 செலவிடுவதற்கான ஒரு திட்டத்தை இந்தியக் கதர்—கிராமக் கைத்தொழில் நிறுவனம் ஏற்றுள்ளதாம்.

அம்பர் சர்க்காவுக்காக ரூ. 18,99,93,000; கதர் உற்பத்திக்காக ரூ. 6,21,10,000; கிராமக் கைத் தொழில் வளர்ச்சிக்காக ரூ. 9,92,30,000 செலவிடப்படும் என்று தெரியவருகிறது.

இடம் பெற்றுவிட்டது !

'காஷ்மீர் இந்தியாவின் ஒரு பகுதியே' என்ற பிரிவு, காஷ்மீர் சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட அரசியல் சட்டத்தில் இடம் பெற்றுள்ளது.

காங்கிரஸ் எதிர்ப்பு சக்திகளை ஒன்று திரட்ட 15 சென்னை சட்டசபை உறுப்பினர்கள் முயற்சி

சென்னை சட்டசபை எதிர்க்கட்சியைச் சேர்ந்த 15 எம். எல். ஏ-க்கள் ஒன்று சேர்ந்து, வரப்போகும் பொதுத் தேர்தலில் காங்கிரசை எதிர்க்கும் கட்சிகளையும் உதிரிகளையும் ஒன்று சேர்த்து ஒரு உடன்பாடு கண்டு காங்கிரசுக்கு ஒருமுகமான எதிர்ப்பை உருவாக்குவதற்கு முயற்சிப்பதென முடிவு செய்திருப்பதாகத் தெரியவருகிறது.

இதற்காக ஒரு குழுவும் நியமிக்கப்பட்டுள்ளதாம்.

கடல் கடந்தவரும் இந்து மதத்தைக் கைகழுவுகின்றனர் !

பர்மாவில், இரங்கூன் சுற்றுப்புறத்தில் வாழும் 2,600 தமிழர்கள், இந்து மதத்தை விட்டு புத்த மதத்தை மேற்கொண்டனர்; அங்குள்ள புத்தர் ஆலயத்தில் இந்த மதமாற்றம் நடைபெற்றது.

கைநுட்ப வேலைகள் :

சென்னை மாநிலத்தில் 14 பயிற்சி நிலையங்கள் ஏற்படுத்தப்படுமாம்!

டில்லி தரும் உதவியின் தாராளமே தாராளம்!

அநேக குடும்பங்களுக்குப் பிழைப்பு கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறதாம்!

கைவேலைப் பொருட்களை அபிவிருத்தி செய்வதற்காக சென்னை மாநிலத்தில் அனேக பயிற்சி நிலையங்களும், உற்பத்தி நிலையங்களும், சேவை நிலையங்களும் ஏற்படுத்தப் படவிருக்கின்றன. வெண்கலம், கண்ணாடி, தோல், பனை ஓலை முதலியவைகளைக் கொண்டு சித்திர வேலைப்பாடமைந்த உபயோகப் பொருள்களைத் தயாரிப்பதற்கு அந்நிலையங்களில் பயிற்சியளிக்கப்படும்.

இதற்காக, அகில இந்திய கைவேலைப் பொருள்கள் போர்டின் சிபாரிசுகளின்பேரில் டில்லி ஆட்சியாளர் சென்னை மாநிலத்திற்குக் கடனாகவும் மானியமாகவும் மொத்தம் சுமார் ரூ. 5,24,000 அனுமதித்திருக்கின்றனர்.

வெண்கல வேலைப் பொருள்கள் அபிவிருத்திக்காக தஞ்சாவூர் மாவட்டத்தில் நாச்சியார்கோயிலிலும் பயிற்சி சேவை நிலையங்கள் ஏற்படுத்தப்படவிருக்கின்றன. ஒவ்வொரு நிலையத்திலும் ஆண்டு தோறும் 15 பேர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும்.

உலோகச் சித்திர வேலைப்பாட்டுத் தொழிலின் அபிவிருத்திக்காக தஞ்சாவூர் மாவட்டத்தில் சுவாமிமலையில பயிற்சி நிலையமொன்று ஏற்படுத்தப்படும். வெண்கல விக்ரகத் தயாரிப்பு வேலையிலும், இதர கலைநுட்பப் பொருள்கள் தயாரிப்பு வேலையிலும் அந்நிலையத்தில் பயிற்சியளிக்கப்படும்.

கட்டில்கள் தயாரிப்பது, பனைமரத்தை உபயோகித்து மேஜை, நாற்காலி வகையறாக்கள் செய்வது ஆகியவைகளுக்காக இராமநாதபுரத்திலும், திருநெல்வேலி மாவட்டத்தில் ஆதாளிகுளத்திலும் இரண்டு உற்பத்தி — பயிற்சி நிலையங்கள் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன.

பனைஓலைத் தயாரிப்புப் பொருள்களை உற்பத்தி செய்வதற்காக இராமநாதபுரம் மாவட்டத்தில் சித்தாரக்கோட்டை என்னுமிடத்திலும், திருநெல்வேலி மாவட்டத்தில் மணப்பாடுஎன்னுமிடத்திலும், இரண்டு பயிற்சி-சேவை நிலையங்கள் ஏற்படுத்தப்படும்.

அந்த மாவட்டங்களில் பனை ஓலைகளைக் கொண்டு விதவிதமான உபயோகப் பொருள்கள் தயாரிக்கப்படுகின்றன. பாய்கள், தொப்பிகள், பணப்பைகள், கைப்பைகள், விசிறிகள், பெட்டிகள் முதலிய பலரகமான உபயோகப் பொருள்கள் செய்யப்படுகின்றன. ஒவ்வொரு நிலையத்திலும் 20 பேருக்குப் பயிற்சியளிக்கப்படும்.

இந்நிலையங்கள் ஏற்படுத்தப்படுவதன்மூலம் அந்த மாவட்டங்களிலுள்ள அனேக குடும்பங்களுக்குப் பிழைப்புக் கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

கைப்பைகள், நகைகள், கடிகாரங்கள் காமெராக்கள் ஆகியவைகளுக்கான தோல் பெட்டிகள் முதலிய தோல் தயாரிப்புப் பொருள்களை உற்பத்தி செய்வதில் பயிற்சியளிப்பதற்காகப் பல்லாவரத்தில் பயிற்சி நிலையம் ஒன்று ஏற்படுத்தப்படவிருக்கிறது.

கண்ணாடி வளையல்கள் தயாரிப்புத் தொழிலை அபிவிருத்தி செய்வதற்காக சேலம் மாவட்டத்தில் கெடிமாரதி என்னுமிடத்தில் பயிற்சி நிலையமொன்றை ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

அடையாறிலுள்ள சாயப் பொருள் ஆராய்ச்சிக்கூடம், கைத்தறி சேவை நிலையம் ஆகியவைகளுக்கு கச்சாப் பொருள்கள், சாயத் தயாரிப்புச் சரக்குகள், இரசாயனப் பொருள்கள் ஆகியவைகளை வாங்குவதற்காகவும், நிர்வாகச் செலவுகளுக்காகவும், அதிகப்படியாக ரூ. 47,000 மானியம் அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

காங்கிரசை எதிர்க்க நிலப்பிரபுக்கள் முடிவு!

திருநெல்வேலி, அக். 31—

திருநெல்வேலி மாவட்ட நிலச்சொந்தக்காரர்களின் விசேட மாநாடு ஒன்று, திரு. நாராயணசாமி அய்யர் தலைமையில் நடைபெற்றபோது, இன்றைய அரசாங்கம் சிறுபான்மையினருக்கு நியாயம் வழங்காது என்று முடிவு செய்து, வரும் பொதுத் தேர்தலில் காங்கிரசை எதிர்த்துப் போட்டியிட வேண்டும் என்ற தீர்மானமும் நிறைவேற்றியுள்ளதாம்.

வரும் பொதுத் தேர்தலில், காங்கிரஸ் அபேட்சகர்களுக்கு, நிலச்சொந்தக்காரர்கள் பொருள் உதவியளிக்கக்கூடாது என்றும் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறதாம்.

சென்னையில் மற்றொரு தொழிற் பயிற்சி நிலையம்

ரூ. 1 இலட்சம் செலவில் ஏற்படுத்தப்பட்டுள்ள அரசாங்கக் காலணித் தொழிற் பயிற்சி நிலையம் சென்னை - திருவல்லிக்கேணியில் திறந்துவைக்கப்பட்டது. 12-பேருக்கு இங்கு பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது. மாதம் ரூ. 25 உபகாரச் சம்பளம் அளிக்கப்படும்.

சென்னையில் இது இரண்டாவது நிலையமாகும்.

இப்பயிற்சி நிலையத்திற்கு ரூ. 18,000 மதிப்புள்ள இயந்திரங்கள் வாங்கப்பட்டுள்ளது.

மற்றொரு பயிற்சி நிலையம் பெரம்பூரில் உள்ளது.

நவீன முறையில் கதிரியக்கச் சிகிச்சை

இந்தியாவிலேயே முதலாவதாக திருவனந்தபுரத்தில் ஏற்படும்

கோபால்டு என்ற கதிரியக்கப் பொருளைக்கொண்டு நோய்களுக்கு சிகிச்சை செய்யும் வசதி திருவனந்தபுரம் மருத்துவக் கல்லூரி நிலையத்தில் ஏற்படுத்தப்படும் என்று தெரியவருகிறது.

இது மிகவும் நவீன முறையாகும்; இந்தியாவிலேயே முதலாவதாக இங்குதான் ஏற்படுத்தப்படுகிறது இதற்கு ரூ 9,50,000-மும், இதற்கான கட்டிடம் கட்டுவதற்கு ரூ. 1,30,000-மும் செலவாகுமெனத் தெரிகிறது.

400 பேருக்கு விடுதலை !

புதிய கேரள அமைப்பை முன்னிட்டு, கேரளச் சிறையிலிருக்கும் 400 குற்றவாளிகள் விடுதலை செய்யப்படுவார்களாம்.

சென்னை கவர்னர் பிரகாசாவுக்கு சென்னை மக்கள் சார்பில் நகரசபை ஸ்டேடியத்தில் நவம்பர் 25-ந் தேதியன்று பிரிவுபசாரம் அளிக்கப்படுமாம்.

ஏழு பிரசவ விடுதிகள்

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் நீலகிரி மாவட்டத்தில் ஏழு பிரசவ விடுதிகள் திறக்கப்பட்டிருப்பதாக மாவட்ட சுகாதார அதிகாரி அறிவித்துள்ளார்.

புதுவைக்குச் சுதந்திரம்

மொழியை அடிப்படையாகக் கொண்டு பிரிக்கப்படும் இந்தச் சூழ்நிலையில், பாண்டிச்சேரி, பல மொழிகள் கொண்ட ஒரு மாநிலமாக விளங்கும்.

பாண்டிச்சேரி விடுதலை பெற்று இரண்டு ஆண்டுகளாகிவிட்டன.

புதுச்சேரி, காரைக்கால், ஏனாம், மாஹி ஆகிய இந்த நான்கு பகுதிகள் கொண்டதே பாண்டிச்சேரி மாநிலம். இதற்கு முன் இவை பிரெஞ்சு ஆட்சியின் கீழ் 240 ஆண்டுகள் இருந்தன. இந்தப் பிரதேசத்தின் பரப்பு 196 சதுர மைல்கள் ஆகும்.

1954 நவம்பர் முதல் விடுதலை பெற்று இந்தியாவுடன் இம்மாநிலம் இணைந்துள்ளது. இங்கு தமிழர் கலாச்சாரம் விளங்குகிறது.

பாண்டிச்சேரி ஒரு அழகான துறைமுகம். 1880-ல் கட்டப்பட்ட துறைமுகம் சீரழிந்து விட்டது. ஆகவே, புதிதாக இங்கு கப்பல் துறைமுகம் கட்டுவதற்கு இந்திய அரசாங்கம் முன்வந்துள்ளது இதற்காக ரூ 29,42,000 செலவு செய்யப்படும். இதற்காக மின்பொறி நிபுணர்கள் வேலை செய்து வருகிறார்கள். நிர்மாண வேலைகள் விரைவில் துவக்கப்படும்.

கடற்கரைப் பகுதியில் வசிப்பவர்களை ரூ. 9 இலட்சம் செலவில் நிர்மாணிக்கப்பட்ட வசதியான தோர் காலனிக்கு வெளியேற்றுகின்றனராம்.

புதிய கப்பல் துறை கட்டும் திட்டம் இரண்டாண்டு காலத்தில் நிறைவேறிவிடும்.

தேர்தல் நிதி தாரீர்!

★

கழகத் தோழர்களே! ஆதரவாளர்களே! பொதுமக்களே! பொதுத் தேர்தல் நெருங்குகிறது! மிக விரைவாக நெருங்கிக் கொண்டிருக்கிறது! பொதுத் தேர்தலில் ஈடுபடுதலாகிய மக்களாட்சி முறைமையைத் தூய உள்ளத்தோடும், நேரிய செயல் முறையோடும் நிறைவேற்றுவதென்று திராவிட முன்னேற்றக் கழகம் முடிவு செய்திருப்பதை எல்லோரும் நன்கு அறிவீர்கள்!

அடுத்துவரும் பொதுத் தேர்தலில், 150 தொகுதிகளில் தி மு. கழகம் போட்டியிட வாய்ப்பு இருக்கிறதென்று, நாடெங்கும் சுற்றி விவரம் அறிந்துவந்துள்ள தேர்தல் ஆய்வுக்குழு, சுவையான செய்தியைத் தந்துள்ளது. இந்தச் சுவையான செய்தியைச் செயலாக்கிக் காட்ட, இலட்சக்கணக்கிலே பொருள் தேவைப்படுகிறது. கழகத் தோழர்கள் தேர்தல் களத்திலே விறுநடை போட்டு வெற்றிஉலா வரவேண்டுமானால், தொகுதி தோறும் செய்யப்பட வேண்டிய அடிப்படை நியாயமான செலவுகளுக்கே ஆயிரக்கணக்கில் ஆகும்.

எனவேதான், இச்சூழ்நிலையை ஆராய்ந்தறிந்த மத்திய செயற்குழு, தேர்தல் பணியை நிறைவேற்ற, குறைந்த அளவு ரூபாய் ஐந்து இலட்சம் தேவையென்று மதிப்பிட்டது.

சிறுதுளி பெருவெள்ளம்!

கழகத் தோழர்களும் ஆதரவாளர்களும் பெருமுயற்சி எடுத்து, கைநிறைய காசுகளை அள்ளியள்ளி வழங்குவார்களேயானால், கழகம் எதிர்பார்க்கும் ரூபாய் ஐந்து இலட்சம் விரைவிலே சேர்ந்துவிடும் என்பதில் ஐயமில்லை.

கிளைக் கழகங்கள், ஆங்காங்கு முறைப்படி முயற்சி எடுத்துத் நிதி திரட்டி, திரட்டிடும் தொகையைச் சேரச்சேர அவ்வப்போது நேரே தலைமைக் கழகத்திற்கு அனுப்பிவைக்கக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

மாவட்டச் செயலாளர்கள், ஆங்காங்குள்ள கிளைக் கழகங்களை அவ்வப்போது தூண்டி, நிதி சேர்த்துத் தலைமைக் கழகத்திற்கு அனுப்பி வைக்கும் பணியில் துணைபுரியுமாறு விரும்பிக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

தனி அமைப்புகளும், தனிப்பட்ட தோழர்களும் தனித்தனியாகத் தலைமைக் கழகத்திற்கு அனுப்பிவைக்கும் தேர்தல் நிதியும் நன்றியறிதலுடன் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேர்தல் நெருங்குகிறது !
பொறுப்பு மிகுகிறது !
கடமையை விரைந்து செய்ய வாரீர் !—வாரீர் !!

வணக்கம்

'அறிவகம்'
சென்னை-13
31-11-56

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்

குறிப்பு :—நிதி அனுப்பி வைக்கவேண்டிய முகவரி :—
பொதுச்செயலாளர்—தி. மு. கழகம்
'அறிவகம்', இராயபுரம், சென்னை-13

தானே இயங்கும் டிக்கெட் இயந்திரம் !

கோரக்பூர், அக். 31—

மண்டல இரயில்வேயின் 43 நிலையங்களில், தானே இயங்கும் 'டிக்கெட்' விற்பனை இயந்திரங்கள் அமைக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

தென் பகுதி இரயில்வேயில் இரண்டு நிலையங்களில் மட்டுமே இந்த இயந்திரம் அமைக்கப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ்—பிரெஞ்சுத் தாக்குதல்:

‘ஒளிவுமறைவில்லாத ஆக்கிரமிப்பே’

‘பிரிட்டன் என்ன, உலகப் போலீசா?’

‘சரித்திரப் போக்கைத் திருப்ப நினையாதீர்’

‘குற்றமேதும் புரியாத எகிப்துமீது பழி ஏன்?’

நேரு எச்சரிக்கை

“வெளிநாட்டு விவகாரங்களில் எனக்குப் போதுமான அனுபவம் உண்டு; அந்த வகையில் கூறுகிறேன்—இப்போது பிரிட்டனும் பிரான்சும் மேற்கொண்டிருக்கிற செயலைவிட—ஒளிவுமறைவில்லாத ஆக்கிரமிப்பு செயலை நான் கண்டதில்லை,”

என்று, பண்டித நேரு, ஐதராபாத் நகரில் கூட்டம் ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

“திடீரென எகிப்திய எல்லையை இஸ்ரேல் தாக்கிற்று; ஆக்கிரமித்தது; யுத்தப் பிரகடனம் ஒன்றும் வெளியிடப்படவில்லை. திடீரெனப் பெரும் அளவில் இஸ்ரேல் எகிப்திய எல்லைக்குள் புகுந்துவிட்டது; இது போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறுவதாகும்; ஐ. நா. சாசனத்தை மீறுவதாகும். இது, தெளிவான—ஒளிவு மறைவில்லாத ஆக்கிரமிப்பாகும்,” என்றும் நேரு குறிப்பிட்டிருக்கிறார்.

‘நாட்டவரே! விழிப்போடிருங்கள்!’

“நமது சமாதானக் கொள்கையை நான் மீண்டும் வலியுறுத்துகிறேன். ஒரு நாடு மற்றொரு நாட்டின்மீது ஆதிக்கம் செலுத்துவதை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

“நாட்டவரே! நாம் எந்தவித அவசர நிலையையும் சமாளிப்பதற்காக விழிப்போடிருக்கவேண்டும்! உலகம் ஒரு நெருக்கடியான கட்டத்தை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறது! எப்போது யுத்தம் வெடிக்கும் என்பது நமக்குத் தெரியாது. எனவே நாம் கவலையற்றிருக்க முடியாது. நாம் எச்சரிக்கையாயிருக்காவிட்டால், யுத்தம் நமக்குத் தீங்கு பயக்கும் என்பதல்ல—நம்மை முழுவதுமாக அழித்துவிடும்! எனவே, நாம் எந்த அவசரத்தையும் சந்திக்கத் தயாராக இருக்கவேண்டும்.

“யுத்தம் நிடித்தால் அதன் விளைவுகள் மிகவும் சோகமயமானதாயிருக்கும். அழிவின் அளவு, அளவிட முடியாததாயிருக்கும். ஏனெனில் இன்று, பலாத்கார நடவடிக்கையின் சின்னமே அணுகுண்டுதான். நாம் இன்று ஒரு அணு யுகத்தில் வாழ்கிறோம். அணு ஆயுதப் போர்க்காலத்தில் வாழ்கிறோம் என்பதை மறந்துவிடக்கூடாது. நாம் ஒவ்வொரு நிலைமையையும், அணு ஆயுதங்களின் பின்னணியோடுதான் ஆராய்ந்து உணரவேண்டும்” என்றும் நேரு எச்சரித்துள்ளார்.

‘யுத்த மேகங்கள்’

“மீண்டும் வானவெளியில் யுத்த மேகங்கள் சூழ்ந்துவிட்டன; சூயஸ் கால்வாய்ப் பிரதேசத்தில் நிகழ்ந்து கொண்டிருக்கும் சம்பவங்கள் அத்துடன் நின்றுவிடாது பரவக்கூடும்,”

என்றும் பண்டித நேரு கூறியுள்ளார்.

‘யுத்தத்தில் இறங்க மாட்டோம்’

“இந்தியா யுத்தத்தில் இறங்கக்கூடாது என்று நாம் முடிவு செய்திருக்கிறோம். ஆனால், நிகழ்ந்துகொண்டிருக்கும் யுத்தம், உலக முழுவதையும்—இந்தியாவையும் சேர்த்துத்தான் பாதிப்பதாக அமையும்,”

என்றும் அவர் வருத்தத்தோடு குறிப்பிட்டிருக்கிறார்.

‘சகிக்கமாட்டோம்’

“பிரிட்டிஷ்—பிரெஞ்சு ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை, ஆசிய—ஆப்பிரிக்காவில் உள்ள எந்த ஒரு சுதந்திர நாடும் சகித்துக் கொண்டிருக்கப் போவதில்லை”

என்றும் நேரு கூறியிருக்கிறார்.

‘நமது அனுதாபம்’

“நமது அனுதாபம் ஆதரவு எல்லாம் எகிப்திற்கே [illegible]”

என்றும் நேரு [illegible] கிறார்.

‘எகிப்து குற்றம் எதும் செய்யவில்லை’

“எந்தவித குற்றத்தையும் தவறையும் எகிப்து [illegible] வில்லை; குற்றம் எல்லாம் இஸ்ரேலுடையதே [illegible], எகிப்தினுடையது அல்ல. ஆனாலும் சிலர் எகிப்தைக் குறைகூற முற்படுகிறார்கள்.”

‘என்ன அதிகாரம் இருக்கிறது?’

“எகிப்தில் சூயஸ் பிரதேசத்தை ஆக்கிரமித்துக்கொண்டு, தங்கள் கப்பல்களைக் காப்பாற்றுவதற்காக, எகிப்து—இஸ்ரேல் படைகளை சூயசை நெருங்கவிடாமல் செய்வோம் என்று பிரிட்டிஷ் — பிரெஞ்சுக்காரர்கள் கூறுகின்றனர்; எகிப்திற்குச் சொந்தமான பிரதேசத்தை ஆக்கிரமித்துக்கொள்ள இவர்களுக்கு என்ன அதிகாரம் இருக்கிறது?”

‘ஓநாயும் ஆடும் கதை போலவா?’

“தங்கள் கப்பல்களைக் காப்பாற்றுவதற்கு என்ற சாக்கில், எகிப்துமீது பிரிட்டிஷ்—பிரெஞ்சு விமானங்கள் குண்டுமாரி பொழிகின்றன. பல திசைகளிலும் தடங்கல் ஏற்பட்டபோதிலும், கால்வாயில் கப்பல் போக்குவரத்திற்கு எந்தவிதத் தடங்கலும் இருக்கவில்லை. அப்படியிருக்க, ஆக்கிரமிப்பில் ஈடுபட்ட இஸ்ரேலைக் கண்டிக்க வேண்டியிருக்க, எகிப்துமீது குற்றஞ் சுமத்துவது, ஆற்று நீரைக் குடிக்கும்போது ஆடு ஒன்றைக் குறைகூறிய ஓநாய் கதைபோல்தான் இருக்கிறது,”

என்றும், நேரு சுட்டிக் காட்டியிருக்கிறார்.

‘அடிபணியமாட்டோம்’

“இந்தியா போன்ற ஒரு சுதந்திரப் பிரதேசத்தில் அன்னிய நாடு ஒன்று துருப்புகளை இறக்குமானால் நாம் அதைச் சகிக்கமாட்டோம். கடைசிவரை எதிர்த்துப் போராடுவோம்!

“இதே பதிலை எகிப்தும் கூறியிருக்குமானால் அது சரியானதே! நமது அனுதாபம் எல்லாம் எகிப்திற்கே! பிரிட்டனும் பிரான்சும் பெரும் தவறு செய்கின்றன. விடுதலை பெற்ற ஒரு நாட்டை ஆயுத பலத்தால் அடக்கிவிடலாம் என்று அவை கருதினால், அது பெரும் தவறாகும். அங்கு என்ன நடக்கும் என்பது எனக்குத் தெரியாது. அவர்கள் எகிப்தில் ஒரு ‘பொம்மை சர்க்காரை’ நிறுவலாம்; ஆனால், எகிப்தோ, ஆசிய நாடுகளும் அதனை அனுமதிக்க முடியாது — அவைகள் அடிபணியமாட்டா”

என்றும், நேரு பண்டிதர் உணர்ச்சியோடு கூறியிருக்கிறார்.

‘சரித்திரத்தைத் திருப்பிப் படிக்கத் திட்டமா?’

“கடந்த யுத்தத்திற்குப் பிறகு அடிமைப்பட்டிருந்த ஆசிய நாடுகள் சிலவற்றிலிருந்து ஏகாதிபத்திய வல்லரசுகள் வெளியேறின; ஆனால் விசித்திரமான வகையில், சரித்திரப் போக்கையே திருப்பி அமைக்கவும், கலகலத்துப்போன காலனி ஆதிக்கத்தைத் திரும்பக் கொண்டுவரவும் முயற்சிகள் நடைபெறுகின்றன. இது ஒரு ஆபத்தான எச்சரிக்கையாகும். இதனை ஆசிய மக்கள் பொறுத்துக்கொள்ள மாட்டார்கள்; வீரத்தோடு எதிர்த்துப்போராடுவார்கள்!”

‘பிரிட்டன் என்ன உலகின் போலீசா?’

“மேற்கத்திய நாடுகளின் திட்டம் எப்படி இருக்கிறதென்றால், விடுதலை பெற்ற நாடுகள் எவையேனும் தங்கள் விருப்பத்திற்கு மாறாக ஏதேனும் காரியங்கள் செய்தால், அந்த வல்லரசுகள், ஒரு ‘இறுதி எச்சரிக்கை’யைத் தந்துவிட்டுப் போலீஸ் நடவடிக்கையில் ஈடுபடுவது போல்இருக்கிறது. பிரிட்டனை உலகின் போலீசாக எவர் நியமித்தார்கள் என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன்!

“19-ம் நூற்றாண்டில் பல காரணங்களால் அவர்கள் உலகின் போலீசாராக இருந்தது உண்மைதான்; ஆனால் நாம் இருபதாம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் வாழ்கிறோம் என்பதை அவர்கள் நினைவுகூரவேண்டும்”

என்றும் நேரு இடித்துரைத்திருக்கிறார்.

மகளிர் மன்றம் துவக்க விழா

★

4-11-56 மாலை 5-மணிக்கு, சென்னை—பெத்துநாயக்கன் பேட்டை அம்மன் கோயில் தெருவிலுள்ள டாக்டர் குருசாமி முதலியார் டி. டி. வி. உயர்நிலைப் பள்ளியில் மகளிர் மன்றத் துவக்க விழா நடைபெறும்.

டாக்டர் எஸ். தருமாம்பாள் அம்மையார் தலைமை தாங்குவார்

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் மன்றத்தைத் துவக்கி வைப்பார்

அண்ணா கருத்துரை வழங்குவார்

தோழியர்

இராணி—அண்ணாதுரை
அருண்மொழி—வில்வம்
துரையர்மான்-சிவப்பிரகாசம்
கமலா—பாலசுந்தரம்
பங்கையர்ச்செல்வி
ஜெகஜோதி—நாகராசன்
சற்குணு
ஜி. பி. அமுதா
ஏ. ஜே. ருக்மணி

ஆகியோர் பேசுவார்கள்

வரவேற்புரை: வெற்றிச்செல்வி— அன்பழகன்

பாராட்டுரை வழங்குதல்: புவனேசுவரி—நடராசன்

இன்னிசை: ஜி கஸ்தூரி

நவரச நடிப்பு: செல்வி இராணி—வசந்தி

‘நாடக விவசாயி’க்கு நன்றி செலுத்தும் விழா

4—11—56 காலை 9-மணிக்கு; சென்னை ஒற்றைவாடை நாடக மன்றத்தில், கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் தலைமையில் ‘நாடக உலகம்—நாடக விவசாயி’ யதார்த்தம் டி. பி. பொன்னுசாமி அவர்களுக்கு நன்றி செலுத்தும் விழா நடைபெறும்; விழாவில் கலைஞர்கள் பலர் கலந்துகொள்வர்.

டி. கே. சீனிவாசன்

நவ. 10, 11-ந் தேதிகளில், ஆமதாபாத் தி. மு. கழக 6-ம் ஆண்டு விழா நிகழ்ச்சிகளில் தோழர் டி. கே. சீனிவாசன் அவர்கள் கலந்துகொள்வார் என்று ஆமதாபாத் நகர தி. மு. க. செயலாளர் இரா. தனிகாசலம் அவர்கள் அறிவித்திருக்கிறார்.

ஐக்கிய கேரள அமைப்புப் பொதுக்கூட்டம்

4-11-56 மாலை 6-மணிக்கு, பாலக்காடு—மங்காவு முற்போக்கு வாலிபர் மன்றச் சார்பில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும்; தோழர்கள் கோவை-செழியன், கே. பொன்னுசாமி சொற்பொழிவாற்றுவர்.

ஜிப்சம் சுரங்கத் தொழிலாளர் போராட்டம்

டால்மியா தொழிற்சாலை முன்பு மறியல்

நேற்று முன்தினம் 8 பேர் கைது

திருச்சி, நவ. 1—

திருச்சியிலுள்ள கல்லக்குடி (டால்மியாபுரம்) ஜிப்சம், சுரங்கத் தொழிலாளர்கள், நேற்று முதல் டால்மியா சிமெண்டுத் தொழிற்சாலையின் முன்பு மறியல் செய்து வருகிறார்கள்.

நேற்றைய மறியலின்போது 8 தோழர்களைப் போலீசார் கைது செய்திருக்கின்றனர். மறியலைத் தொடர்ந்து நடத்துவதென்ற முடிவுப்படி இன்றும் மறியல் நடைபெறுகிறது.

இந்த மறியலில் கலந்துகொள்வதற்கெனச் சுற்றுப்புறக் கிராமங்களிலிருந்து நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் கல்லக்குடிக்கு வந்தவண்ணம் இருக்கின்றனர்.

இந்த மறியல் வெற்றிகரமாக நடைபெறச் செய்வதற்கான ஏற்பாடுகள் அனைத்தையும், அத்தொழிற் சங்கத் தலைவர், பொதுச் செயலாளர், துணைச் செயலாளர்களான எம். வடிவேலு, எம். குழந்தைவேலு, எம். எஸ் மணி, எஸ். ஜி. கிருட்டிணன் ஆகியோர் கல்லக்குடியிலேயே தங்கியிருந்து கவனித்து வருகின்றனர்.

(ந. - நி.)

செங்கற்பட்டு மாவட்ட தி. மு. க. செயற் குழு

“4-11-56 காலை 9-மணிக்கு, செங்கற்பட்டு மாவட்ட செயற்குழு, செங்கற்பட்டு நகரச் செயலாளர் ஈ. பலராமன் அவர்கள் இல்லத்தில் நடைபெறும்; அதுபோது, தேர்தல் ஆக்க வேலைகள், வரவு—செலவு, மற்றும் இதர பிரச்சினைகள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும்”

என்று செங்கற்பட்டு மாவட்டச் செயலாளர் தி. ந. சம்பந்தம் அவர்கள் அறிவிக்கிறார்.

சென்னை 37-வதுவட்ட தி. மு. க. செயற்குழு உறுப்பினர்கட்கு:

4—11—56 காலை 10-மணிக்கு, சென்னை — இராயப்பேட்டை தி. மு. க. 37-வது வட்டக் கழகப் பணிமனையில், கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெறும்.

சென்னை 14-வதுவட்ட தி. மு. க. பொது உறுப்பினர்கட்கு:

4—11—56 காலை 9-மணியளவில், 14-வதுவட்ட தி. மு. கழகப் பொதுஉறுப்பினர் கூட்டம், கழகப் பணிமனையில் நடைபெறும்.

கடையநல்லூர் தி. மு. கழகப் பொது உறுப்பினர்கட்கு:

4—11—56 இரவு 8-மணியளவில், நகர தி. மு கழகப் பொது உறுப்பினர் கூட்டம் முத்துக்கிருட்டிணபுரம் இரயில்வே — பீடர் ரோடில் உள்ள கட்டிடத்தில் நடைபெறும். தேர்தல் சம்பந்தமான முக்கிய பிரச்சினைகள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

புதிய அலுவலகத் திறப்பு விழா

மதுரை மாவட்ட—நகர தி. மு. கழகக் கிளைகளின் புதிய அலுவலகம் 4—11—56 காலை 10-மணியளவில், மதுரை மேலக்கோபுரத் தெரு, 60-ம் எண் கட்டிடத்தில் திறக்கப்படும்.

சிறப்புக் கூட்டம்

4-11-56 காலை 10-மணிக்கு, சேலம் — செவ்வாய்ப்பேட்டை, கண்டக்காரத்தெரு, மீனாட்சியம்மன் கோயிலில், திரு எ. பாஸ்கரன் தலைமையில், திருக்குறள் கழகச் சிறப்புக்கூட்டம் நடைபெறும். ‘புற நானூற்றில் வீரம்’ என்ற தலைப்பில், திரு. கி. பிச்சமுத்து பேசுவார். மாலை 5-மணிக்கு ‘எது பெற்றால் வாழ்வு நிறைவாகும்,’ என்ற தலைப்பில், திரு. கி. பாண்டுரங்கன்—திரு. மு. இராமசாமி ஆகியோர் சொற்போர் புரிவர்.

மகிழ்ச்சியின்றி மக்கள் மந்தமாக உள்ளதேன்?

காரணம் கூறுகிறார் டில்லி அமைச்சர் கேஸ்கர்

புதுடில்லி, அக். 31—

“இசை, நாட்டியம், நாடகம் போன்ற கலைகளை மாணவர்கள் மிகுந்த அக்கறையுடன் போற்றி வளர்க்கவேண்டும்,”

என்று இந்திய செய்தித்துறை அமைச்சர் கேஸ்கர் கலாச்சாரக் கழக விழாவில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர், “கலாச்சார நடவடிக்கைகள் கௌரவக் குறைவானவை என்று மக்கள் கருதுவதினாலேயே அவர்கள் மகிழ்ச்சி இல்லாமல் மந்தமாக உள்ளனர்” என்றும் குறிப்பிட்டார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.